## இந்திய நாட்டின் மாற்றம் தமிழ்நாட்டிலிருந்து துவங்கும்!

# முன்னேறிய நாடுகளை விட முன்னேறிய மாநிலம் தமிழ்நாடு!

## தூத்துக்குடி சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, மே 10-

**இந்திய நாட்டின் மாற்றம் தமிழ்நாட்டிலிருந்து துவங்கும் என்றும், முன்னேறிய நாடுகளை விட முன்னேறிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றும் தூத்துக்குடியில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசுகையில் குறிப்பிட்டார்.**

அவர் பேசியது வருமாறு:-

“தளபதி தலைமையிலான தி,மு,க, அரசின் இரண்டாண்டு சாதனைகளை மக்களின் முன்னால் தைரியமாக தலை நிமிர்ந்து சொல்லும் வகையில் நாம் இங்கே நின்று கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இதற்கு முன்னே அமைந்திருந்த ஆட்சி எப்படி இருந்தது என்று நம் எல்லாருக்கும் தெரியும். கடந்த ஆட்சி என்பது எதுவுமே நடைபெறாத ஆட்சி, யாரையும் சந்திக்க முடியாது, மக்களுக்கான எந்த திட்டங்களும் நடைபெற்றதில்லை, கோவிட் காலத்தில் மக்கள் எப்பாடு பட்டார்கள் என்பது பற்றிய அக்கறையில்லாத ஒரு தெளிவற்ற ஆட்சி தான் கடந்த ஆட்சி.

இங்கே பேசிய நமது மாவட்டச் செயலாளர்கள் கூறியது போல தான் பதவியில் இருக்க வேண்டும், தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொள்ள வேண்டும், அதற்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயார் என்று நடந்த ஆட்சி. பதவிக்காக அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் போராட்டம் இன்று வரைக்கும் முடிந்தபாடில்லை. அதோடு அவர்கள் ஒரு கூட்டணியிலே இருக்கிறார்கள். அதில் இங்கே இருப்பவர்கள் வேண்டாம் என்கிறார்கள். உடனே டெல்லி போகிறார்கள். அங்கே உட்கார்ந்து பேசி விட்டு இங்கே வந்தால் மறுபடியும் பிரச்சினை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் முதலமைச்சர் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலேயே... தேர்தல் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு இடைப்பட்ட காலத்திலேயே அதிகாரிகளை அழைத்து மக்களை எப்படி பாதுகாப்பது என்று சிந்தித்து செயல்படத் தொடங்கிய முதலமைச்சர் நமது முதலமைச்சர் தளபதி

“கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையானாம் வேந்தர்க் கொளி”

என்பது திருக்குறள்.

**திருக்குறளை - ஆளுநர் புரிந்து கொள்ள வேண்டும்!**

நாடாளுமன்றத்துக்குச் சென்றாலும் அங்கே திருக்குறள்தான். பிரதமரை பார்த்தீர்கள் என்றால் திருக்குறள்தான். இந்த பக்கம் திரும்பி பார்த்தால் நம்முடைய நிதி அமைச்சர் திருக்குறள் சொல்கிறார். இல்லையென்றால் சங்கத்தமிழ். இங்கே தமிழ்நாடு ராஜபவனில் ஒருவர் இருக்கிறார். அவர் திருக்குறளை முழுவதுமாக படித்து கரைத்துக் குடித்து விட்டாராம். எங்கு பார்த்தாலும் அவர்கள் திருக்குறளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருக்குறளை புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாளெல்லாம் திருக்குறளை உணர்ந்திருந்த தலைவர். ஆட்சியிலே இருக்கக்கூடிய ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்றால் மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து செய்ய வேண்டும். கருணையோடு செய்ய வேண்டும். தன்னுடைய செங்கோல் வளையாமல் நடுநிலைமையோடு செயல்பட வேண்டும். தன்னுடைய மக்களை எல்லாம் தனது கைகளில் ஏந்துவதைப் போல ஏந்தி பாதுகாக்க வேண்டும். அப்படி இருக்கக்கூடிய அந்தத் தலைவனுக்கு தான் புகழ் என்ற ஒளி கிடைக்கும் என்கிறது அந்த திருக்குறள்.

அப்படிப்பட்ட ஒரு ஆட்சி அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 15 லட்சம் ரூபாய் உங்கள் வங்கிக் கணக்கில் போடுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதை யாரும் கேட்கவில்லை. ஆனால் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னீர்களே ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னீர்களே என்று நம்மை திரும்ப திரும்ப கேட்டார்கள். இதோ வரும் செப்டம்பர் மாதம் முதல் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமை தொகை மாதாமாதம் வழங்க போகிறோம்.

கலைஞர் திட்டத்தின் நீட்சியான தளபதி திட்டம் அதுமட்டுமில்லாமல் தலைவர் கலைஞர் அவர்கள் தன் ஆட்சிக் காலத்திலே பெண்களுக்கான திருமண உதவித் திட்டம் கொண்டு வந்தார். அதாவது எட்டாவது வரை, பிறகு பத்தாவது வரை படித்தவர்கள் திருமணம் செய்தால் அவர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கும் என்று ஒரு திட்டத்தை கொண்டு வந்தார்.

இன்று தமிழ்நாடு ஒன்றிய அரசு கண்டு கொண்டிருக்கக் கூடிய கனவுகளை எல்லாம் தாண்டிவிட்டோம். இன்று பத்தாவது படித்தால் திருமணத்திற்கு உதவித்தொகை தருகிறேன் என்று சொல்ல வேண்டிய சூழல் இல்லை. பெண்களே கல்லூரி வரைக்கும் சென்று படிக்க தயாராகி விட்டார்கள். அந்த இடத்துக்கு வந்து விட்டார்கள். இன்று கலைஞரின் கனவு நிறைவேறி விட்டது. பன்னிரண்டாவது படித்த பிள்ளைகள் நாம் கல்லூரி படிக்க வேண்டும் என்று உறுதியோடு நிற்கக்கூடிய நிலையை உணர்ந்து கொண்டு... நீ படி நீ படிக்கும் வரை உனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நான் தருகிறேன் என்று படிக்க ஆசைப்படக்கூடிய அந்தப் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறார் நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி.

இந்தத் திட்டத்தால் சென்ற ஆண்டு படிப்பை நிறுத்தி இருக்கக்கூடிய ஆயிரக் கணக்கான பெண்கள் மறுபடியும் கல்லூரிக்கு திரும்பி இருக்கக்கூடிய நிலையை தமிழ்நாட்டிலே நாம் பார்த்து வருகிறோம். ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை என்றால் இந்த பெண்கள் வீட்டிலேயே இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கும்.

பொதுவாகவே ஆண் பிள்ளைகளை தான் படிக்க வைப்பார்கள். அவர்கள் பிற் காலத்தில் சம்பாதித்து போடுவார்கள் என்ற நம்பிக்கையில். காலம் மாறி விட்டது. ஆண் பெண் இருவருமே வேலைக்கு போகிறார்கள். அம்மா அப்பாவை பெண்களும் பார்த்துக் கொள்ளும் நிலைமை பல இடங்களில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாதம் ஆயிரம் ரூபாய் திட்டத்தின் மூலம் கல்லூரி படிப்பை நிறுத்தக்கூடிய பெண்கள் கூட மீண்டும் தொடரும் நிலையை நாம் பார்த்து வருகிறோம்.

**பெண் விடுதலைக்கான பேருந்து பயணம்!**

அதுபோல பெண்களுக்கு கட்டணம் இல்லாத பேருந்து பயணம். அது ஏதோ பஸ்ஸில் சென்று வருவது மட்டுமல்ல. அதைத் தாண்டி பெண் விடுதலையை குறிக்கக்கூடியது. தன் கையில் காசு இல்லை என்றால் என்னால் வெளியே செல்ல முடியாது. நினைக்கக் கூடிய ஒன்றை செய்ய முடியாது. எதையாவது ஒரு விஷயத்தைச் சென்று கற்றுக் கொண்டு வர வேண்டும் என்றால் முடியாது. கோயிலுக்கு செல்ல வேண்டும் என்றால் கூட இரண்டு பேரிடம் பணம் கேட்க வேண்டும். அம்மாவை பார்க்க போக முடியாது. நண்பர்களை பார்க்க போக முடியாது. இத்தனை இறுக்கத்தோடு இருந்து கொண்டிருக்க கூடிய இந்த பெண்களுக்கு வெளியே போக வேண்டும் என்று நினைத்தால் யாரிடமும் போய் நான் நின்று எனக்கு காசு வேண்டும் வெளியே செல்ல வேண்டும் அதனால் நீங்கள் அனுமதி கொடுக்க



வேண்டும் என்று கேட்கக் கூடிய நிலை இருக்கக் கூடாது. இதையெல்லாம் உடைக்க வேண்டும் என்பதற்காக இன்று நம்முடைய ஆட்சியிலே பெண்களுக்கு கட்டணம் இல்லாத பேருந்து பயணம் திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது.

ஒரு சர்வே எடுத்து பார்த்திருக்கிறார்கள். பிளானிங் கமிஷனில் இதை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அதிலே இந்த கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் மாதம் இன்னொரு முதல் 800 முதல் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். அந்த ஆயிரம் ரூபாய் என்பது குடும்பத்தில் இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு நல்ல உணவாக மாறுகிறது. அந்த ஆயிரம் ரூபாய் என்பது பிள்ளைகளுக்கான நல்ல கல்வியாக மாறுகிறது. சேமிப்பாக மாறுகிறது. மிகப் பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமாக இந்த கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டத்தை நமது முதலமைச்சர் உருவாக்கி தந்திருக்கிறார்கள்.

**காலை உணவு என்னும் முழுமைத் திட்டம்!**

காலாவதியாகிவிட்டது என்று நமது ஆளுநர் சொன்னார் இல்லையா? அந்த திராவிட கட்சியின் தொடக்க கால நீதிக் கட்சி ஆட்சியில் தான் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கும் திட்டம் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அதை விரிவு படுத்துகிறார். அதற்குப் பிறகு திராவிட இயக்கங்களின் ஆட்சியிலே தான் இந்த திட்டம் மேலும் மேலும் விரிவடைகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் அதை முழுமையான சத்துணவு திட்டமாக உருவாக்கிக் காட்டினார்.

தமிழ்நாட்டை பார்த்து விட்டு இந்தியாவின் பல மாநிலங்களிலே பள்ளிகளில் சத்துணவு திட்டம் கொண்டுவரப்பட்டது. இப்போது நம்முடைய ஆட்சியிலே 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறக்கூடிய அளவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்.

மதிய உணவு மட்டும் போதாது பிள்ளைகளுக்கு காலை உணவு வேண்டும் என்பதற்காக அரசு பள்ளிகளில் இந்த திட்டத்தை 18 லட்சம் மாணவர்கள் பயன் பெறக்கூடிய அளவிலே கொண்டு வந்திருக்கிறார்.

**நான் முதல்வன் - புதுமை பெண் திட்டம்!**

தொழிற்சாலைகள் வருகிறது முதலீடுகள் வருகிறது... ஆனால் அந்த இடத்தில் எல்லாம் நம் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும் அளவுக்கு அவர்கள் தகுதி பெற்றவர்கள் ஆகியிருக்கக்கூடிய அளவிலே அவர்களை உருவாக்குவதற்கு நான் முதல்வன் திட்டத்தின் வழியாக சுமார் 12 லட்சம் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய நிலை தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் இருக்கக் கூடாது அவர்கள் தொழில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு புதுமையான திட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது நம்முடைய ஆட்சியிலே தான்.

ஆளுநர் அவர்கள் கோயில்கள் எல்லாம் பாதுகாப்பது பி.ஜே.பி. தான் என்று பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்முடைய இந்த ஆட்சியிலே கிட்டத்தட்ட 4200 கோடிக்கு மேல் கோவில் சொத்துக்களை... நீங்கள் யார் காப்பாற்றுகிறார் என்று சொல்கிறீர்களோ அந்த கடவுளின் சொத்துக்களையே காப்பாற்றி கொடுத்தது திராவிட இயக்க ஆட்சிதான்.

பெரியார் வழியிலே பேரறிஞர் அண்ணா வழியிலே தலைவர் கலைஞர் வழியிலே தளபதி அவர்கள் நடத்தும் இந்த ஆட்சிதான் 2200 கோயில்களுக்கு மேலே கோவில் சொத்துக் களை பாதுகாத்து மீட்டெடுத்திருக்க கூடிய ஆட்சி. இப்படி இந்த சமூகத்திலேயே யார் யாருக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்து கொண்டு செயல்படுத்தி வரக் கூடிய ஆட்சி தான் தளபதியின் ஆட்சி.

**தூத்துக்குடிக்கு திட்டங்கள்!**

இதுவரை தமிழ்நாட்டில் விவசாயத்துக்கு என்று தனி பட்ஜெட் கிடையாது. ஒன்றிய அரசு விவசாயிகளுக்கு எதிராக சட்டங்களை கொண்டுவந்து ஒரு வருடத்திற்கு மேலாக விவசாயி களை வெயிலிலும் குளிரிலும் மழையிலும் போராட்டத்தில் ஈடுபட வைத்தது. ஆனால் நம்முடைய அரசு விவசாயிகளின் கனவாக இருக்கக் கூடிய விவசாயத்துக்கு என்று தனி பட்ஜெட் என்ற நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றியது.

அந்த பட்ஜெட்டிலே நம்முடைய தூத்துக்குடி மாவட்டத்திற்கு என்று வாழைக்கும் பனை மரங்களுக்கும் என ஆராய்ச்சி மையங்களை அறிவித்திருக்கிறார்கள். சென்ற பட்ஜெட்டில் பனைமர பாதுகாப்பை பற்றிய அறிவிப்புகள் வந்தன. இந்த பட்ஜெட்டில் வாழை ஆராய்ச்சி மையம் பனை ஆராய்ச்சி மையம் என இரண்டையும் தூத்துக்குடிக்கு தந்திருக்கக் கூடிய ஆட்சி நமது தளபதியின் ஆட்சி.

பல முன்னேறிய நாடுகளில் கூட டாக்டர்களை சந்திக்க வேண்டும் என்றால் பல மாதங்கள் கூட அப்பாயின்மென்ட் காத்திருக்க வேண்டும். திராவிட மாடல் ஆட்சியிலே நம் வீட்டுப் பிள்ளைகள் பல பேர் படித்து இன்று வெளிநாடுகளில் வேலை செய்து வருகிறார்கள். காலாவதியெல்லாம் ஆகவில்லை உலகத்தையே ஆண்டு கொண்டிருக்க கூடிய நிலைக்கு நாம் வந்துவிட்டோம். அந்த வகையில் வெளிநாட்டில் கூட டாக்டர்களிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்க வேண்டும் என்றால் மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டிலே உங்களைத் தேடி மருத்துவர்கள் வரக் கூடிய திட்டம் தான் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டம்.

உங்களுக்கு ரத்தத்தில் சர்க்கரை இருக்கிறதா உங்களுக்கு ரத்த கொதிப்பு இருக்கிறதா வீட்டுக்கே வந்து பரிசோதனை செய்துவிட்டு அதற்கான மருந்து மாத்திரைகளை வீட்டுக்கே கொண்டு வந்து மருத்துவர்கள் தரும் ஆட்சி ஆட்சி தான் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி. இவ்வாறு ஒவ்வொரு நாளும் கோடிக் கணக்கான மக்கள் பயன்பெறக்கூடிய அளவிலே திட்டங்களை தீட்டி தந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நமது ஆட்சி. தலைவர் கலைஞர் கொண்டு வந்த திட்டம் தான் 108 ஆம்புலன்ஸ் திட்டம். அதன் தொடர்ச்சியாக நமது தளபதி அவர்கள் விபத்து நடந்து விட்டால் ஒரு காலத்தில் எல்லாம் இந்த மருத்துவமனையில் சேர்க்க முடியாது அங்கே கொண்டு போங்கள் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் எங்கே விபத்து நடந்தாலும் அதற்கு அருகிலே இருக்கக் கூடிய மருத்துவமனை முதலுதவி சிகிச்சையை செய்தே ஆக வேண்டும் அதற்கான செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என அறிவித்திருக்கக் கூடிய ஆட்சி தான் நமது திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

**மீனவர்களுக்கான ஆட்சி கழக ஆட்சி!**

இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டது போல மீனவர்களுக்கு மீன்பிடி தடைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்த 5000 ரூபாய் உதவித்தொகையை தற்போது 6 ஆயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்கும் ஆட்சி நமது ஆட்சி.

காலநிலை மாற்றத்தால் கடற்கரைகள் மிகப் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை பாதுகாப்பதற்காக நம்முடைய நெய்தல் நிலத்தை எல்லாம் பாதுகாப்பதற்காக 2000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்க கூடிய ஆட்சி நமது திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

இந்த தூத்துக்குடி மாநகரம் மாவட்டம் கொண்டாடக்கூடிய ராவ் பகதூர் குரூஸ் பெர்னால்டஸ் அவர்களுக்காக 77 லட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது நம்முடைய ஆட்சியில் தான்.

நம்முடைய தூத்துக்குடி துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. தூர் வாருவதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்று காலையிலே கூட கோரப்பள்ளம் என்கிற குளத்தை தூர் வாருவதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகளை துவக்கி இருக்கக்கூடிய ஆட்சி நமது தளபதி தலைமையிலான திமுக ஆட்சி. இந்தத் திட்டத்தால் தூத்துக்குடி மாநகரம் வரை குடிதண்ணீர் கிடைக்கும்.

இப்படி ஒவ்வொரு நாளும் மக்களுக்கான பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்று மாலை கூட நமது அமைச்சர் நமது மேயர் அவர்கள் இருக்கும் போது தான் தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்கள் எங்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். மழைக் கால நிவாரணம் வேண்டும் என்று அவர்கள் நீண்ட காலமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

நம்முடைய ஆட்சியிலே கிட்டத்தட்ட 8,400 பேருக்கு மேலே மாதம் ஐயாயிரம் ரூபாய் என்று அவர்களுக்கு மழைக் கால நிவாரண நிதி என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது நம்முடைய ஆட்சியிலே. அது மட்டுமல்ல... உப்பளத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் வேண்டும் என்பதும் அவர்களுடைய நீண்ட கால கோரிக்கை. நலவாரியம் இருந்தால் தான் அவர்களுக்கான கல்வி உதவித் தொகை கடன் வசதிகளை சாத்தியப்படுத்திக்கொள்ள முடியும். அவர்களுடைய கோரிக்கைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கிற வகையிலே அவர்களுக்கான நல வாரியத்தை அமைத்து தந்திருக்க கூடிய ஆட்சி தான் நமது தளபதி தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

எத்தனையோ நாட்களாக கனவு கண்டு கொண்டிருந்த இத்தனை திட்டங்களை ஒவ்வொரு நாளும் செய்து கொண்டிருக்க கூடியது நம்முடைய நல்லாட்சி. இதைப் பார்த்து சில பேர் பயப்படுகிறார்கள்.

**ஆளுநரின் காலாவதியான கனவு!**

ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து பீடு நடை போட்டு நடந்து கொண்டிருக்க கூடிய தளபதி அவர்கள் தலைமையிலான ஆட்சி. இதைப் பார்த்து சில பேர் எங்களுக்கு எதிராக செயல்பட்டு விடுவார்களோ என்று அச்சப்பட்டு சில தூதுவர்களை இங்கே அனுப்பி கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். எங்களுடைய கருத்தியல் காலாவதி ஆனது அல்ல. உங்கள் பதவி காலாவதியான பதவி. அது பிரிட்டிஷ் அரசாங்கத்துடைய மிச்சம் எச்சம். அதை தூக்கிப் போட வேண்டிய காலகட்டம் வந்து விட்டது.

அவர் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ பத்திரிகையிலே கொடுத்திருக்கும் ஒரு நேர்காணலில் திராவிடம் என்பது காலாவதியானது என்று சொல்கிறார். திராவிடம் என்றால் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று பொருள். ஆளுநர் தன்னை சனாதனத்தின் ஆதரவாளர் என்று சொல்லிக் கொள்கிறார். அவர்கள் யாரையெல்லாம் படிக்கக் கூடாது என்று சொன்னார்களோ... யாரையெல்லாம் சாலையில் நடக்க கூடாது என்று சொன்னார்களோ.... யாரையெல்லாம் வேட்டி கட்ட கூடாது என்று சொன்னார்களோ... யாரை எல்லாம் தோளில் துண்டு போடக்கூடாது என்று சொன்னார்களோ... அவர்கள் பெருமையோடு வந்து உங்களுக்கு மேலே அதிகாரிகளாக உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடிய நிலையை உருவாக்கிக் காட்டியது திராவிட இயக்கம். அது உங்களுக்கு பிடிக்காது. திராவிடம் காலாவதி ஆகிவிட்டது என்று சொல்கிறீர்கள்... உங்கள் ஆசை அது காலாவதி ஆகிவிட வேண்டும் என்பது.

எல்லாவற்றையும் உங்கள் கைகளில் வைத்துக் கொண்டிருந்தீர்கள். ஒரு பெரிய தோட்டம் அதில் விளையும் கனிகளையும் எங்களுக்கு மட்டுமே என்று வைத்துக் கொண்டு இருந்தீர்கள். இன்று அது தப்பு. எல்லோருக்கும் எல்லாமும் என்று அதை பகிர்ந்து கொடுத்தது திராவிட இயக்கம் திராவிட ஆட்சி.

நீங்கள் பெருமையாக சொல்லும் சனாதன தர்மம் என்ன சொல்கிறது... ஒரு இந்து உடைய கடமை மதகுருக்களை மதிப்பது. அவர்களை பேணி காப்பது. பிராமணர்களை மதிப்பது பேணி காப்பது போஷிப்பது. இதைத்தான் தவறு என்று தந்தை பெரியார் சொன்னார். யாரும் யாரையும் தூக்கிப் பிடிக்க வேண்டாம், யாரையும் தோளில் சுமக்க வேண்டிய அவசியம் இல்லை. நீயும் நானும் ஒன்று ஆணும் பெண்ணும் ஒன்று. எல்லோரும் சமம். எல்லோரும் மனிதர்கள் என்று சொன்னது தான் திராவிட இயக்கம். அது எப்படி காலாவதி ஆகும்?

மனிதனை மனிதனாக மதி என்று சொல்வது தான் திராவிட இயக்கம். காலாவதியாகப் போவது... இதையெல்லாம் தவறு என்று சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள். இது போன்ற பேசிக் கொண்டிருக்க கூடியவர்களை மக்கள் ஓட ஓட விரட்டக்கூடிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

**ஆளுநர் பதவி பற்றி அம்பேத்கர்!**

ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்... நமது அரசியல் சாசனத்தை எழுதிய அண்ணல் அம்பேத்கர் முன்பு ஒரு கேள்வி வந்தது.

இந்த ஆளுநர் பதவி என்பதை மக்கள் பிரதிநிதியைப் போல தேர்தல் வைத்து கொண்டு வரலாமா... அல்லது நியமனம் செய்து ஒருவரை அந்த பதவியில் அமர வைக்கலாமா? என்ற கேள்வி வந்த போது அந்த அம்பேத்கர் அவர்கள்... ‘இந்தப் பதவிக்கு யாராவது போட்டிக்கு வருவார்களா? யாரும் வர மாட்டார்கள். கவர்னர் பதவி என்பது ஒரு அலங்கார பதவி. இதற்கு அவ்வளவு மரியாதை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஓட்டு போட வேண்டிய அவசியம் இல்லை’ என்று கூறினார். ஒரு உருவாக்கப்பட்ட அலங்கார பதவி தான் இந்த ஆளுநர் பதவி. இதையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அலங்காரம் என்பது அவசியம் இல்லை என்றால் களையப்பட வேண்டிய ஒன்று. அது அடிப்படை இல்லை.

தமிழ்நாட்டில் அலங்காரங்களை எல்லாம் தூக்கி போட்டுவிட்டு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஒரு ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் அலங்காரங்கள் களையப்படும் தூக்கி எறியப்படும். அரிதாரங்கள் களையப்படும் தூக்கி எறியப்படும். வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலிலே நிச்சயமாக இந்த நாட்டிலே ஒரு மாற்றம் வரும். அந்த மாற்றம் தமிழ்நாட்டில் இருந்து துவங்கும்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.



திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தெற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றியச் செயலாளர் டி.அசோக்குமார் தலைமையில் கெஜல்நாயக்கன்பட்டியில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, மாநில ஆதிதிராவிட நலக்குழு துணைச் செயலாளர் சா.ராஜேந்திரன், தலைமைக் கழகப் பேச்சாளர் எஸ்.மேகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள். இக்கூட்டத்தில் வீ.வடிவேல், மு.க.அருள்நிதி மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

### வாரியத்தலைவராக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமனம்!

## தூய்மைப் பணியாளர் நல வாரியம் திருத்தி அமைப்பு!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, மே .10-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆய்வுக் கூட்டத்தில், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் புதிய உறுப்பினர்களை நியமித்து வாரியம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப் பட்டதன் அடிப்படையில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ஓர் உப தலைவர், 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் புதிய 12 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு இவ்வாரியத்தை திருத்தி அமைத்து அரசாணை (நிலை) எண்.61. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந.6த் துறை, நாள். 03.05.2023 - இல் ஆணையிடப்பட்டது.*

*அதில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவராக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*உப தலைவர், இவர்களை தொடர்ந்து 14 புதிய அலுவல் சார்ந்த உறுப்பினர்களையும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களையும் அரசு நியமித்துள்ளது.*



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகர தி.மு.கழகம் சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் பி.வி.பி.முத்துகுமார், நகரக் கழகச் செயலாளர் க.தண்டபாணி, நகர மன்றத் தலைவர் சங்கவி முருகதாஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், அரங்க பாலகிருஷ்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் எஸ்.ராமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.